ESIC - இன் அடல் பீமிட் வியக்தி கல்யாண் யோஜனா (ABVKY) - ஓர் அறிமுகம்

தொழிலாளர்களின் கண்ணியத்தை பாதுகாப்பது பொருளாதார ரீதியாக அவர்களுக்கு பாதுகாப்பை உறுதி செய்வது

सत्यमेव जयते

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சகம்
இந்திய அரசாங்கம்

எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்போரேஷன்

அடல் பீமிட் வியக்தி கல்யாண் யோஜனா (ABVKY) திட்டம் ESI சட்டம், 1948, பிரிவு 2(9) இன் கீழ் வரையறுக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ESIC - யால் நிர்வகிக்கப்படும் ஒரு நலத்திட்டமாகும். இந்த திட்டத்தில் காப்பீட்டாளர்களுக்கு நிவாரணத்தொகை 90 நாட்கள் வரை வாழ்நாளில் ஒரு முறை வழங்கப்படுகிறது. ஆரம்பத்தில் 2 ஆண்டு காலத்திற்கு ஓர் மாதிரி திட்டமாக 1.07.2018 முதல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த திட்டம், இப்போது மேலும் ஓராண்டுக்கு அதாவது ஜூலை 01, 2020 முதல் ஜூன் 30, 2021 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வேலை வாய்ப்பின்மைக்கான நிவாரணத்தொகை முதலில் வழங்கப்பட்ட சம்பளத்தின் 25% - லிருந்து இப்போது 50% ஆக மிகுதியாக்கப்பட்டிருப்பதோடு, தகுதி வரம்புகளும் தளர்த்தப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தில் பயன் பெற, காப்பீட்டாளர் தனது வேலைவாய்ப்பின்மைக்கு முன்பாக குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு காப்பீடு செய்துகொள்ளக்கூடிய வேலையில் பணிபுரிந்திருக்க வேண்டும். மேலும் வேலைவாய்ப்பின்மை காலத்திற்கு முந்தைய பங்களிப்பு காலகட்டத்தில் 78 நாட்களுக்கு குறைவில்லாமல் பங்களிப்பு அளித்திருப்பது அவசியமாகும்.

மேலும் வேலைவாய்ப்பின்மைக்கு முன் இரண்டு ஆண்டுகளின் மீதமுள்ள மூன்று பங்களிப்பு காலகட்டத்தில் ஏதாவது ஒன்றில் குறைந்த பட்சமாக 78 நாட்களுக்கு பங்களிப்பு அளித்திருக்க வேண்டும். காப்பீட்டாளர் வேலைவாய்பிழந்த தேதியிலிருந்து தொடங்கி முப்பது நாட்களுக்கு பிறகு நிவாரண தொகைக்காக விண்ணப்பிப் பதற்கான தகுதி பெறுகிறார். இந்த மிகுதியாக்கப்பட்ட பயன்கள் மற்றும் தளர்த்தப்பட்டுள்ள நிபந்தனைகள் 24 மார்ச், 2020 முதல் 31 டிசம்பர், 2020 வரையிலான காலகட்டத்திற்கு மட்டுமே பொருந்தும். இந்த நிவாரணத்தை பெறுவதற்கான கோரிக்கை மனுவினை இணையதள முகவரி www.esic.in இல் நேரடியாக சமர்ப்பித்த பின்பு கோரிக்கை மனு, பிரமாண பத்திரம், ஆதார் அட்டை நகல் மற்றும் வங்கி கணக்கு விவரங்களை தாங்கள் சார்ந்துள்ள உநஐஇ கிளை அலுவலகத்திற்கு அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம். விண்ணப்பம் பெற்ற 15 நாட்களுக்குள் காப்பீட்டாளர்களின் விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு அதற்குரிய உதவித்தொகை அவர்களது வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்

அடல் பீமித் வியக்தி கல்யாண் யோஜனாவின் கீழ்

- நிவாரணத்தொகை தொழிலாளர்களுக்கு இரட்டிப்பாக்கப் பட்டுள்ளது
- தொழிலாளியின் பேங்க் அக்கவுன்டிற்கு நேரடியாக கிரடிட் செய்யப்படுகிறது
- தகுதி வரம்பில் தளர்வு செய்யப்பட்டுள்ளது
- www.esic.inல் தொழிலாளர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்

அடல் பீமிட் வியக்தி கல்யாண் யோஜனா (ABVKY) - வில் "அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்" மற்றும் அதற்குரிய பதில்கள்

வரிசை எண்	கேள்வி	பதில்
1	ஊரடங்கு காலகட்டத்தின்போது, தான் பணிபுரியும் அலுவலகத்திலிருந்து சம்பளம் பெறாமல் அவரது உநஐ பங்களிப்பு பூஜ்ஜியம் (0) என்று காட்டப்பட்டால் அந்த காப்பீடு செய்து கொண்டுள்ள நபருக்கு அஆயஓவ-இல் நிவாரணம் உண்டா? ESIC சந்தா செலுத்தும் சீட்டிலிருந்து காப்பீடு செய்து கொண்ட நபர்களின் பெயர்களை அகற்றுவது கட்டாயமா? ஏனெனில் பெரும்பாலும் தொழிலாளியின் பங்களிப்பு ''0'' என்று காண்பித்தாலும் விண்ணப்பம் ஏற்புடையதாக இல்லை.	இல்லை இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணம் வேலையை இழந்த காப்பீட்டாளர்களுக்கு மட்டுமே கிடைக்கும். ESIC சந்தா செலுத்தும் சீட்டிலிருந்து நிர்வாகத்தினர் (EMPLOYER) காப்பீடு செய்து கொண்ட நபர் வேலையிலிருந்து விலகியதாக காட்டியிருந்தால் மட்டுமே அவர் வேலையில் லாதவராக கருதப்படுவார். மாதாந்திர பங்களிப்பு சீட்டில் நிர்வாகத்தினர் (EMPLOYER) காப்பீட் டாளரின் பங்களிப்பு "0" என்று காட்டுகிறார் என்றால் அந்த காப்பீடு செய்து கொண்ட நபர் இன்னமும் வேலையில் உள்ளார் என்றும் அதனால் நிர்வாகத் தினர் (EMPLOYER) இந்த தொழிலாளிக்கு ஏதோ கொஞ்சம் தொகையை அளித்து வருகிறார் என்றும் கருதப்படும். அதனால் அத்தகைய தொழிலாளர்கள் இந்த திட்டத்தின் கீழ் நிவாரணம் பெறுவதற்கு தகுதியற்றவர்களாக கருதப்படுவார்கள்.
2	ஊரடங்கு காலகட்டத்தின்போது காப்பீட் டாளர்கள் வேலையில்லாமல் இருந்திருந்து இப்போது வேலையில் இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் பயன் கிடைக்குமா?	அத்தகைய தொழி லாளிகள் தேவைப்படும் தகுதி நிபந்தனை களை பூர்த்தி செய்கிறார்கள் என்றால், இந்த திட்டத்தின் கீழ் நிவாரணம் பெறுவதற்கான தகுதியை அடைகிறார்கள். ஆனால் அவர்கள் மனுவில் நிவாரணம் கோரும் காலத்தின்போது கட்டாயம் வேலையில்லாமல் இருந்திருக்க வேண்டும்.
3	மனுதாரர் வேலைவாய்ப்பின்மைக்கு பிறகுள்ள முதல் முப்பது நாட்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் நிவாரணம் கோர முடியுமா.	காப்பீட்டாளர் தான் வேலை இழந்த தேதியிலி ருந்து முப்பது நாட்கள் கழித்தே வேலையின் மைக்கான உதவித்தொகை பெற விண்ணப்பம் சமர்ப்பிக்க முடியும். காப்பீட்டாளர் வேலையின் மைக்கான உதவித்தொகை கோரும் விண்ணப் பத்தில் தான் வேலையில் இல்லாத தேதி முதலே உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கலாம்.
4	உநஐ இணைய முகப்பில் வேலையின்மை உதவித்தொகை கோரும் விண்ணப்பம் ஏற்றுக்கொள் ளப்பட்டாலே நிவாரணத் தொகை வழங்குவதற்கான உத்திரவாதம் ஆகி விடுமா? இணையத்தின் வாயிலாக கோரிக் கையை அனுமதித்த பிறகும் கூட கோரிக்கை மனுவினை தள்ளுபடி செய்ய வாய்ப்புள்ளதா?	இணையத்தின் வாயிலாக கோரிக்கையினை பதிவு செய்வது மட்டுமே இந்த திட்டத்தின் கீழ் நிவாரணத்தொகை வழங்குவதற்கான உத்தரவாத மாகிவிட முடியாது. நிர்வாகத்தினர் (EMPLOYER) களின் பதிவேடுகள் ESI கிளை அலுவலக மேலாளரினால் சரிபார்க்கும்போது கோரிக்கை கோருபவர் நிவாரணத்திற்கு தகுதியற்றவர் என்பது கண்டுபிடிக்கப்பட்டால், அந்த கோரிக்கை மனு ESI கிளை அலுவலக மேலாளரால் தள்ளுபடி செய்யப்பட்டுவிடும்.

S. No.	Question	Reply
5	பணி ஓய்வு பெறுவதற்கான வயது வரம்பு என்ன?	எந்த ஒரு காப்பீடு செய்து கொண்ட நபரை எடுத்துக்கொண்டாலும் பணிஓய்வுக்கான வயது அந்தந்த அலுவலகத்தின் கொள்கையின்படியே இருக்கும். ESIC சட்டம் பிரிவு 56-இல் தரப்பட்டிருக்கும் விளக்கத்தின்படி பணி ஓய்வுக்கான வயதை அறுபது வயதாக எடுத்துக்கொள்ளலாம்.
6	தொழிலாளிகள் தங்கள் அலுவலகத்திருந்து வேலையை விட்டு விலகும்போது ராஜினாமா கடிதத்தை சமர்ப்பிப்பது பொதுவாக நிகழக்கூடியது. அத்தகைய தொழிலாளர்கள் ABVKY - யின் கீழ் நிவாரணம் பெற தகுதியானவர்களா?	தங்கள் வேலையை ராஜினாமா செய்துவிட்ட தொழிலாளிகள் வேலையில்லாதவர்களாகவே கருதப்படுவார்கள். ஒருவேளை அவர்களுக்கு தகுதி இருக்குமானால் இத்திட்டத்தின் கீழ் நிவாரணம் பெறலாம். ஆனால் அவர்கள் ராஜினாமா செய்து வேலையை விட்டு நின்று போன பிறகு நிர்வாகத்தினர் (EMPLOYER) அவர்களுக்கு ஆட்குறைப்புக்கான இழப்பீடோ / பொருளாதார ரீதியாக எந்த இழப்பீட்டு தொகையோ வழங்கியிருக்கக்கூடாது.
7	ஊரடங்கு (அரசாங்க உத்தரவின் கீழ் நிர்வாகத்தினர் (EMPLOYER) நிறுவனத்தை தற்காலிகமாக முடக்குதல்) மட்டுமே தொழிலாளி களுக்கு ABVKY - ன் கீழ் நிவாரணம் வழங்க தகுதியான காரணமாக இருக்க முடியுமா?	முடியாது. நிர்வாகத்தினர் (EMPLOYER) ஊரடங்கு / பணிமுடக்கம் செய்யப்பட்ட காலகட்டத்தில் தொழிலாளிகள் தொடர்ந்து பணியமர்த்தப்பட்டி ருந்தனர் என்றால் அத்தகைய காரணங்களுக்கு ABVKY- ன் கீழ் நிவாரணம் எதுவும் வழங்கப்பட மாட்டாது.
8	கோரிக்கை மனுவை பரிசீலனை செய்து பார்க்கும்போது ESI கிளை அலுவலக மேலாளர் தொழிலாளியிடம் அவரது வேலையின்மை குறித்து கேட்க வேண்டுமா மற்றும் அவரது வேலையின்மை குறித்து அவரிடம் ஏதாவது உறுதிமொழி பெற வேண்டுமா?	உநஐ கிளை அலுவலக மேலாளர் தொழிலாளியிட மிருந்து எந்த உறுதிமொழியும் பெற தேவையில்லை. அவர்களிடம் விசாரிப்பதும் தவிர்க்கப்பட வேண்டும். முன்னாள் காப்பீட்டாளரிடம் தேவைப்படும் எல்லா தகவல்களும் பரிசீலனையின் போதே பெற்றுக்கொள் ளப்பட வேண்டும்.
9	பரிசீலனையின் போது நிர்வாகத்தினர் (EMPLOYER) தொழிலாளி வேலையை விட்டு நின்று விட்டார் என்றோ அல்லது அவர் வேலையை ராஜினாமா செய்துவிட்டார் என்றோ அல்லது சுயமாக பணி ஓய்வு எடுத்துக்கொண்டார் என்றோ தெரிவித்தால்? தங்கள் வேலையை ராஜினாமா செய்துவிட்ட தொழிலாளிகள் வேலையில்லாதவர்களாகவே கருதப்படுவார்கள்.	ஒருவேளை அவர்களுக்கு தகுதி இருக்குமானால் இத்திட்டத்தின் கீழ் நிவாரணம் பெறலாம். ஆனால் அவர்கள் ராஜினாமா செய்து வேலையை விட்டு நின்று போன பிறகு நிர்வாகத்தினர் (EMPLOYER) அவர்களுக்கு எந்த ஆட்குறைப்புக்கான இழப்பீடோ / பொருளாதார ரீதியாக எந்த இழப்பீட்டு தொகையோ வழங்கியிருக்கக்கூடாது.
10	வேலையில்லாத தொழிலாளியை பொறுத்தவரை EPF பங்களிப்பு செய்யப்பட்டிருந்தால் அப்போது அந்த தொழிலாளி வேலையில்லாதவராக கருதப்படுவாரா?	இல்லை. பரிசீலனையின்போது தொழிலாளியைப் பொறுத் தமட்டில் EPF பங்களிப்பு செலுத்தப்பட்டிருப்பது தெரிய வந்தால் அத்தகைய தொழிலாளி வேலையில் லாதவராக கருதப்பட மாட்டார்.

மேலும் அதிக விவரங்களை தெரிந்து கொள்ள, ESIC கிளை அலுவலகம் அல்லது டோல் ஃப்ரீ நம்பர் 1800 11 2526-ஐ தொடர்பு கொள்ளுங்கள்.